# தமிழீழம் ஒரு நாடு என்பதனை அரசு ஏற்றுள்ளது

31-7-1991

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 15 இதழ்: 170
யாழ்ப்பாணம் புதன்கிழமை 31-7-1991

## தளபதி தினேஷ் பேட்டி

(யாழ்ப்பாணம்)
"இன்று நடைபெறும் யுத்தத்தின் மூலம் தமிழீழம் ஒரு நாடு என்பதை சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விட்டது.'' என்ற விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தினேஷ் தெரிவித்தார்.

கட்டைக்காடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன்

[2ம் பக்கம் பார்க்க]

## ஒரு அதிகாரி உட்பட 5 படையினர் பலி

(கொழும்பு)
ஆனையிறவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் ஒரு அதிகாரி உட்பட ஐந்து படையினர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 12 படையினர்

(4-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் புதிய இராணுவ உத்தி

[கொழும்பு]
கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப்பகுதிகளில் கடந்த சில தினங்களுக்கு முன் இரு தினங்கள் யுத்தம் தணிந்து இருந்த நேரத்தில் விடுதலைப்புலிகள் புதிய இராணுவ உத்திகளை

(4ம் பக்கம் பார்க்க)

### புல்லாவெளியில் உக்கிர மோதல்

# கடல் நீரேரி ஊடாக படையினர் கணிசமான முன்னேற்றம்!

((யாழ்ப்பாணம்)

புல்லாவெளியிலிருந்து நேற்று அதிகாலை வாடியடி, கடல் நீரேரி ஆகிய இரு வழிகள் ஊடாக விமானப் படையின் உதவியுடன் முன்னேறிய இராணுவத்துக்கும் புலிகளுக்குமிடையில் நேற்று முழுவதும் நடைபெற்ற கடும் மோதலின் பின்னர் இராணுவத்தினர் கணிசமான தூரம் முன்னேறி ஆனையிறவு முகாமிலிருந்து சுமார் அரை மைல் தூரத்தில் நிலைகொண்டிருப்பதாக நேற்று நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

புல்லாவெளியிலிருந்து வாடியடிச் சந்திப்பக்கமாக முன்னேறிய படையினரை புலிகள் சளைக்காது போரிட்டு வாடியடிச் சந்தியில் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதேவேளை புல்லாவெளிச் சந்தியிலிருந்து பிரிந்த மற்றொரு இராணுவஅணி கடல் நீரேரி வழியாக ஆனையிறவு முகாமை நோக்கி முன்னேறி முகாமிலிருந்து அரை மைல் தூரத்தில் நிலை கொண்டுள்ளது.

இந்த இராணுவ அணியினரை தொடர்ந்து முன்னேற விடாது இச்செய்தி அச்சுக்குப்

[4ம் பக்கம் பார்க்க]

## அமைச்சர் குமாரமங்கலம் ராஜினாமா வாபஸ்

(புதுடில்லி)
இந்திய மத்திய அமைச்சர்களில் ஒருவரான திரு ரங்கராஜன் குமாரமங்கலம் தமது ராஜினாமாக் கடிதத்தை பிரதமரிடம் சமர்ப்பித்து, பின்னர் மூத்த தலைவர்களின் வற்புறுத்தலுக்கமையத் தமது ராஜினாமாவை வாபஸ் பெற்றார்

[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் தொடர்புடையோரை வெளியேற்ற கோரிக்கை

[சென்னை]
தமிழகத்திலுள்ள இலங்கை தமிழ் அகதிகளில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றுமாறு தமிழக முதல்வர் இந்திய மத்திய அரசை கோரியுள்ளதாக பி.பி.ஸி தெரிவித்தது

[4-ம் பக்கம் பார்க்க]

## இலங்கை, இந்தியாவிடமிருந்து இராணுவ உதவி கோரும்?

[புதுடில்லி]
வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் பலம் பெருமளவு அதிகரித்து வருவதையடுத்து இலங்கை அரசு இந்தியாவிடமிருந்து இராணுவ உதவிகளை கோருமென பெருமளவு எதிர்பார்க்கப்படுவதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

புலிகளின் பலம் இலங்கை முழுவதற்கும் பெரும் அச்சுறுத்தலாகவிருப்பதாகவும் புலிகளை கட்டுப்படுத்த எந்தவிதத்திலும் இலங்கைப் படைகளால் முடியாது போய்விட்டதாலுமே இலங்கை இவ் உதவியை இந்தியாவிடமிருந்து கோரியுள்ளதாம்.

இந்தியாவிடமிருந்து பெருமளவில் இராணுவ தளபாடங்

(4ம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகள் குறித்து அமைச்சர்கள் பேச்சு

[புதுடில்லி]
தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை உடனடியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக நேற்று இந்திய-இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் பேச்சுக்களை நடத்தினர்கள். இதனை இந்தியப் பிரதமர் பி. வி.

(4-ம் பக்கம் பார்க்க)

## வாழப்பாடி பதவி விலகல் ஜெயலலிதா வரவேற்பு

(சென்னை)
அமைச்சர் வாழப்பாடி ராமமூர்த்தி பதவி விலகியதை தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா வரவேற்றுள்ளார்.

காவிரி நீர்ப்பிரச்னையில் மத்திய அரசு பாரபட்சமாக நடந்து கொண்டதாகக் கூறி வாழப்பாடி ராமமூர்த்தி நேற்றுமுன்தினம் தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

## விலை அதிகரிப்பு

நாளை (01-8-91) முதல் ''ஈழநாடு''வின் விலை 50 சதத்தால் அதிகரிக்கப்படுகின்றது. இவ்விலை அதிகரிப்பு மூலப்பொருள்களின் விலை நாளுக்கு நாள் உயர்ந்துவருவதால இவ்விலையேற்றத்தை செய்யவேண்டியுள்ளது வாசகர்கள் இந்த அதிகரிப்பைப் பொருட்படுத்தாமல் ஆதரவு நல்குவீர்கள் என மனதார நம்புகின்றோம்.

நிர்வாகி.

## கிழக்கு மாகாணத்திலும் புலிகளின் தாக்குதல் ஆரம்பம்

[மட்டக்களப்பு]
கிழக்கு மாகாணத்திலும் படையினருக்கு எதிரான விடுதலைப்புலிகளின் தாக்குதல் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதையடுத்து பெருமளவு இராணுவத்தினர் கிழக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(3-ம் பக்கம் பார்க்க)

## இன பிரச்னையை தீர்க்குமாறு இந்தியா வற்புறுத்து

[புதுடில்லி]
இலங்கை இனப்பிரச்னையை தீர்க்கஅரசியல் ரீதியான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கை வெளியுறவு அமைச்சரைக் கேட்டுள்ளார்.

இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வு முயற்சி தற்போது தேக்கநிலை அடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. ஹரோல்ட்ஹேரத்தை கௌரவித்து நேற்று முன்தினம் மாலை திரு. மாதவ்சிங் சோலங்கி விருந்தளித்தபோது

[4-ம் பக்கம் பார்க்க]

## ஹெலி தாக்குதல்

[யாழ்ப்பாணம்]
தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயப்பகுதியில் நின்ற பொதுமக்கள் மீது ஹெலிகொப்டரிலிருந்து நேற்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த எஸ். ஜெயரஞ்சிதமலர் [24 வயது] என்ற பெண் காயமடைந்து

[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

மில்க்வைற் திரவ சவர்க்கார (Liqudi Soap) சகல தேவைகளுக்கும் உதவுகிறது. அரைப் போத்தல் ரூபா. 45/- பாவித்த வெற்றுப் போத்தல் லேபலுடன் திருப்பித்தந்தால் ரூபா. 2/- கழிவு. மில்க்வைற் யாழ்ப்பாணம். (எ-1468)

### கண்டெடுக்கப்பட்டது

திரு. நா தில்லைவா சகரி புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு என்பவரால் கைதடியையும், கோப்பாயையும் இணைக்கும் வீதியில் சில ஆவணங்களுடன் சிறுதொகைப் பணமும், சிறிய ஆபரணமும் மணிபேர்சுடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதைத்தவற விட்டவர்கள். தகுந்த ஆதாரம் காட்டி மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும். (சி-5045]


தமிழீழம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேரடி மோதலில் ஈடுபட்டுக் காயமடைந்து சிகிச்சைபெற்று வரும் தினேஷ், பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

"இந்த யுத்தத்தால், விடுதலைப் புலிகள் ஒரு மரபு வழி வந்த இராணுவ அணி என்பதை வெளிநாடுகள் பல ஒப்புக்கொண்டுள்ளன. அந்த அளவுக்கு நாம் இன்று மிகவும் பலமுள்ள நிலையிலிருக்கின்றோம்.

"அரசாங்கம், இது ஒரு 'இறுதி யுத்தம்' எனக் கூறிக்கொண்டு, தனது முழு அளவிலான முப்படைகளின் பலத்தையும் பிரயோகித்து வருகின்றது.

"ஆனல் நாம் ஒரு பயிற்சி யுத்தமாகவே இந்தப் போரைக் கருதுகிறோம். அகன்ற வெட்டவெளியில், ஆயிரக்கணக்கான சிறிலங்கா இராணுவத்துடனும், கவச வாகனங்களையும், மிகப் பிரமாண்டமான பீரங்கி வண்டிகளையும். குண்டுமாரி பொழியும் யுத்த விமானங்களையும் எப்படி எதிர்கொண்டு வருங்காலத்தில் போராடவேண்டும் என்பதற்கு இந்த யுத்தம் எமக்கு ஒரு பயிற்சியாகவே அமைகின்றது:

"எமது இளம் போராளிகளுக்கு யுத்த முனையில் எந்த ஒரு பாதுகாப்பு அரணும் கிடையாது. அவர்களுககுத் துணையாகக் கவச வாகனங்கள் இல்லை; விமானப் படைகளின் துணையில்லை. அவர்களுக்கு அவர்களே பாதுகாப்பைத் தேடிக்கொண்டு போராடிவருகின்றனர்.

"அண்மையில் கட்டைக் காடுப் பகுதியில் நடைபெற்ற மோதலின்போது 15 வயது மதிக்கத்தக்க ஒரு இளம் போராளி நீண்ட நேரமாகப் பாசறைக்குத் திரும்பி வராததால் அவன் வீர மரணம் அடைந்திருக்கக்கூடும் என நாம் அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கும் வேளையில், நான்கு எல். எம். ஜி. துப்பாக்கிகளைத் தன் பிஞ்சு முதுகில் சுமந்தவண்ணம் எம்மை நோக்கி அந்தப் போராளி வந்துகொண்டிருந்தான் அவன் நான்கு சிறிலங்கா இராணுவச் சிப்பாய்களைச் சுட்டு வீழ்த்திவிட்டு, அவர்களின் துப்பாக்கிகளைச் சுமந்து வந்ததைக் கண்டு என் உடம்பு புல்லரித்தது.

அதே போராளி இன்று படுகாயமடைந்து, யாழ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றான். அவன் சுகம் அடைந்ததும் மீண்டும் போர் முனைக்குப் போகப்போகின்றான்.

இந்த யுத்தத்தில் ஈடுபட, போதியளவு இளைஞர்கள் முன்வராததினால் படுகாயமடைந்த

(3ம் பக்கம் பார்க்க)


# நம்பிக்கை நாணயத்தின் சின்னம் → ஷப்ரு




## நிதித்துறையில் உங்கள் நண்பன்

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ருவின் துரித வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

**Term Deposit - நிலையான வைப்பு**

| Period-Months காலம்-மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | — | 17 வீதம் |
| 06 | — | 18 வீதம் |
| 12 | 18 வீதம் | 20 வீதம் |
| 24 | 21 வீதம் | 23 வீதம் |
| 36 | 22 வீதம் | 24 வீதம் |

**வைப்புச் சான்றிதழ் - Certificate of Deposit**

| Period-Month காலம்-மாதப | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டிவீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588-00 | 9,175-00 | 45,872-00 | 91,744-00 | 18 வீதம் |
| 12 | 4,133 00 | 8,265-00 | 41,323-00 | 82,645-00 | 21 வீதம் |
| 24 | 3,379-00 | 6,757-00 | 33,784-00 | 67,568-00 | 24 வீதம் |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000-00 | 10,000-00 | 50,000-00 | 100,000-00 | |

**பணிப்பாளர் சபை**

திரு. எல். பி. ஈ. கருணரட்ண
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B. (Lond) முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்
A. I. B. (Lond) பொதுமுகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
B. A. (Hons)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 29-09-1978 லைசென்ஸ் இல: NBS/R/90/021

# ஷப்ரு

## யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073.

2 ஆர். ஏ. டீ. மெல். மாவத்தை,
கொழும்பு - 4.
தொலைபேசி: 508087 - 90. (எ-1467)

# "புலிகளின் விமான எதிர்ப்பு கருவிகளை வெளியே கொண்டுவர முயல்கிறோம்"

## - ஏயர் மார்ஷல் ஹேரன் குணவர்த்தன -

[கொழும்பு]

விடுதலைப் புலிகளின் வசமுள்ள விமானம் தாக்கும் ஆயுதங்களை அவர்கள் வெளியே கொண்டு வந்து போர்விமானங்களை முடிந்தால் தாக்கட்டும். விமான எதிர்ப்பு ஆயுதங்களை அவர்கள் வெளியே கொண்டு வருவதையே நாங்களும் விரும்புகிறோம்;

இவ்வாறு விமானப் படை அதிகாரியும், விமானப்படை உத்தியோகபூர்வ பேச்சாளருமான ஏயர் மார்ஷல் ஹேரன் குணவர்த்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்பு பீரங்கிகள் இருப்பதாக பத்திரிகைகள் கூறுவதுபோல் புலிகளிடம் இந்த ஆயுதங்கள் இல்லை. நாம் 4000, 5000 அடி உயரத்தில் பறந்து யுத்தம் புரிவதாக கூறுவதிலும் எதுவித உண்மையுமில்லை.

எமது விமானிகள் யுத்தம் நடைபெறுகின்ற இடத்திற்கு ஏற்றவிதத்தில் உயரப் பறந்தும், தாழ்ந்து வந்தும் தாக்குதல் நடாத்துகின்றனர். உயரப் பறக்கவேண்டிய நேரத்தில் உயரப் பறந்தும், தாழப்பறக்க வேண்டிய நேரத்தில் தாழப்பறந்தும் யுத்தம் புரிகின்றனர்.

புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருப்பதாக கூறப்பட்டால் அவற்றை வெளியே கொண்டுவர முயல்வோம் என்றும் அவர் கூறினார்.

புலிகள் விமான எதிர்ப்பு பீரங்கிகொண்டு தாக்குவதை தாம் நேரில் கண்டதாக இலங்கை விமானப்படை விமானி ஒருவர் கூறியுள்ளதும், ஆனையிறவு மோதலில் ஒரு ஹெலியும், ஒரு குண்டு வீச்சு விமானமும் பலத்த சேதமுற்றதும், ஆனையிறவு யுத்தம் ஆரம்பிக்க முன் வவுனியா மன்னார் வீதியில் காட்டுப்பகுதியொன்றில் ஹெலி ஒன்றை புலிகள் சுட்டு வீழ்த்தியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் பி. பி. ஸி, வெரித்தாஸ், றேடியோ அவுஸ்திரேலியா, வொய்ஸ் ஒவ் அமெரிக்கா உட்பட பல வானொலிகளும் புலிகளிடம் விமான எதிர்ப்பு பீரங்கிகள் இருப்பதாகவும் ஆனையிறவுப் போரில் இலங்கை விமானங்கள் 5000, 6000 அடி உயரத்திற்கு மேலிருந்து இலக்கு எதுவுமின்றி தாக்குதலை நடாத்தி வருவதாகவும் தமது செய்தி ஒலிபரப்புகளில் தினமும் கூறிவருவதும் தெரிந்ததே. (சி)

## பொதுசன உதவிப் பணம்

(மானிப்பாய்)

யாழ். செயலக மோட்டார் போக்குவரத்து பிரிவில் இயங்கி வரும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பெப்ரவரி மார்ச் மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் தற்பொழுது வழங்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த குடாநாட்டின் பல பகுதிகளிலும் தங்கியிருக்கும் இப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கே மேற்படி பணம் வழங்கப்படுகிறது. (71)

## ஆனையிறவுப் போரில் புலிகள் வெற்றி பெற ஆலயங்களில் பிரார்த்தனை

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகள் போராளிகள் வெற்றி பெறவும் போராளிகள் ஆன்மபலம் பெறவும் தமிழினம் சுபீட்சமாக வாழவும் கோரி கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான ஆலயங்களில விசேட பூசைகளும் பிரார்த்தனைகளும் அன்னதானங்களும் இடம் பெற்றன.

ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் ஆலயம், கிளிநொச்சி அருள்மிகு முருகன் ஆலயம், ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரமம், புதுமுறிப்பு விநாயகர் ஆலயம், முருகண்டி பிள்ளையார் ஆலயம், முரசுமோட்டை முருகன் ஆலயம், கிருஸ்ணபுரம் வெத்தலகேம் ஜெப ஆலயம் ஆகியவற்றிலும் விசேட பூசைகளும். வழிபாடுகளும் இடம்பெற்றன.

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் ஜெய ஆலயத்தில் வணபோதகர் எஸ். ஜோன் தலைமையில் எட்டுத்தினங்களாக புலிகள் போராளிகள் வெற்றிபெறக் கோரி திவ்விய சுபீட்ச பூசை நடைபெற்று வருகிறது. (88)

## மக்கள் அஞ்சலி

(வேலணை)

ஆனையிறவு மோதலில் வீர மரணத்தைத் தழுவிக் கொண்ட லதன் (வேலாயுதம் திருநாமம் நெடுந்தீவு) புகழுடல் மக்களின் அஞ்சலிக்காக தீவகத்தில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயத்திலும் புங்குடுதீவு துரைச்சாமி வித்தியாலயம் வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் ஆகியவற்றில் மக்களினது அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வேலணை சாட்டி மாவீரர்மயானத்தில் தீயுடன்சங்கமமானது (75)

## இருளை நீக்கிடலாம்...

பீறிடும் குருதியைக் கரங்கொண்டு பொத்தியோர்
கரத்தினில் துவக்கு ஏந்தி
வீறுடன் எதிரியைக் கொன்று குவித்திடும்
வீராக்கு நிகருமுண் டாமோ?
கூறிடு இனிஇந்த மண்ணிலே அடிமையாய்க்
கும்பிட்டு வாழ்ந்திடான் தமிழன்
போரிட்டு நம்மண் மீட்டெழுந் திடுவான்
பொழுதெலாம் மகிழ்வினில் திளைப்பான்!

அன்னிய அரசின் ஆக்கிர மிப்பால்
அழிந்த செந்தமிழ்ழ மண்ணின்
பண்ணிசைத் தென்றல் வீசுயாழ் நகரின்
பலமிகு கோட்டையும் மாங்குளமும்
இன்னும் பலப்பல முகாம்களாம் என்னும்
இரணியர் படைவீடு யாவும்
கண்ணை இமைக்கும் நேரத்துள் எம்மவர்
கரங்களில் வீழ்ந்தது காண்பீர்!

ஆனை யிறவும் வெற்றிலைக் கேணியும்
அணித்துள கட்டைக்கா டுகளும்
மானத் தமிழரின் கழுத்தினில் வெற்றி
மாலையாய் வீழ்ந்திடும் நாளை
ஈனரோ பாவி மக்களைக் கொன்று
இன்புற்றுப் பழிதீர்த் திடலாம் தமிழர்
சேனையோ களத்தில் எதிரியை அழித்துநம்
தேசத்தின் இருளைநீக் கிடலாம்.

- நெடுந்தீவு லக்ஸ்மன்

## விடுதலைப் போராட்டத்திற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

[பருத்தித்துறை]

''இன்று தமிழீத்தில் மாத்திரமன்றி சிங்களப் பகுதிகளையும் போர்க்கால சூழ்நிலை பீடித்துள்ளது. சிங்களவர்களும் நிம்மதியற்ற வாழ்க்கையையே வாழ்கின்றார்கள்.''

இவ்வாறு பருத்தித்துறை மாதனை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க 6-வது ஆண்டு விழாவை புலிக்கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்து உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. அரசண்ண குறிப்பிட்டார்.

விழாவிற்கு திருமதிஇராமச்சந்திரன் கலையரசி தலைமை தாங்கினர்

திருமதி இராதா. கலாவதி மங்கள விளக்கேற்றி வைத்தார். பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரும், பருத்தித்துறைபிரதேசசபையின் விசேட ஆணையாளருமான திரு.செல்ல ஸ்ரீனிவாசன் விழாவிலேபிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். தொடர்ந்து உரையாற்றிய திரு. அரசண்ண குறிப்பிட்டதாவது:

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே இன்று பெண்கள் ஆயுதமேந்தி பல சாதனைகளை நிலைநாட்டி விடுதலைப் போராட்டத்தில் முனைப்பை ஏற்படுத்தி வருகின்றனர். இன்றைய விடுதலைப் போராட்டத்திற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பே மிக இன்றியமையாதது. எனவே பொதுச் சேவை நிறுவனங்கள் இத் நடவடிக்கைகளில் முன்னின்று செயற்படவேண்டும்.

பருத்தித்துறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி நவமணி கந்தையா கிராமசேவை அலுவலர் திரு. எஸ். சண்முகநாதன் ஆகியோரும் உரையாற்றினர். [52]

## தமிழீழம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகளே தமது காயங்கள் மாறியதும் மீண்டும் போர்க்களம் போகவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் 5 ஆயிரம் இளைஞர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ள முன்வருவார்களானல் எதிரிகளை எமது மண்ணிலிருந்து மிக சுலபமாககலைத்து விடலாம்'';

''இனறு நடைபெறும் இந்த மாபெரும் யுத்தத்தில் இளைஞர்கள் அனைவரும் பங்கு கொண்டால் நாம் எதிரிகளை மிகச் சுலபமாக வீழ்த்தி விடுவோம்''.

இந்த யுத்தத்தையிட்டுநான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அரசாங்கம் தற்போது இராணுவத்துக்கு இளைஞர்களைத் திரட்டிக் கொண்டே இருக்கின்றது. ஆயிரக்கணக்கில் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வதற்கு முன் வருகின்றார்கள். கூடிய சம்பளம் கிடைக்குமென்ற நோக்கமல்ல அவர்களுக்கு. இந்தநாடு தமிழர்களிடம் அடிபணியக் கூடிய நிலை ஏற்படக்கூடாது என்ற ஒரு வெறியில்தான், இராணுவத்தில் சேருகின்றார்கள் இந்த யுத்த முனையில் மடியும் இராணுவத்தினரைப் பார்த்தால் பெரும்பாலும் இளைஞர்களாகவே இருக்கின்றார்கள்.

இதே போன்ற உணர்வுடன் எமது தமிழ் இளைஞர்களும் போராட்டத்தில் கலந்து கொள்ள முன்வருவாராகில் எதிரிகளை நாம் மிகவும் இலகுவில் வீழ்த்தி விடுவோம்.

களத்தில் நின்று போராடும் போராளி தன்கையிலிருந்து நழுவும் ஆயுதத்தை ஏந்திப் பிடிப்பதற்கு பின்னல் ஒரு இளைஞர் அணிதயாராக நிற்கின்றது என்பதை தெரிந்து கொண்டாலாகில் அப் போராளியின் உற்சாகம் பலமடைகின்றது. தன்முயற்சி வீண் போகவில்லை என்று மகிழ்ச்சியடைகின்றான்.

உலகில் பற்பல நாடுகளில் யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. அந்த யுத்தங்களில் ஈடுபடும் நாடுகள் சமபலத்துடனேயே ஒருவருடன் ஒருவர் போரிடுகின்றார்கள். அப்படிப்பட்டவர்களின் யுத்தமுனை சாகசங்கள் பல கதைகளாக புத்தகவடிவிலும் திரைப்பட ரீதியிலும் வெளிவருகின்றன.

ஆனல் இந்த வெட்டவெளி யுத்தத்தில் எமது ஆண், பெண் போராளிகள் காட்டி வரும் வீரதீரச் செயல்கள் யாருக்கும் தெரியாது.

விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தினேஷ், பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றும் போது அவருடன் மத்திய குழு உறுப்பினர் திரு. பேபி, யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் ஆகியோரும் கூட இருந்தனர்.

கட்டைக்காடு மோதலில் படுகாயமடைந்த திரு. ஆஞ்சநேயர் சற்று உடல்தேறிய நிலையில் இருக்கக் காணப்பட்டார். (வி)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட்டக்கச்சியில் இயங்கி வரும் விவசாயக்கல்லூரியில் விரிவுரைவுகள் ஆகஸ்ட் 05ம் தேதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது மாணவர்கள் அனைவரும் ஆகஸ்ட் 04-ம் திகதி ஞாயிறுவிடுதிக்குசமூகம் கொடுக்குமாறு அதிபரினல் கேட்கப்படுகின்றனர்.

## கிழக்கு மாகாணத்திலும்

(1-ம பக்கத் தொடாச்சி)

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் கடந்த சில தினங்களில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் இருஇராணுவ உயர் அதிகாரிகள் உட்பட 12 படையினர் கொல்லப்பட்டும் 11 சிப்பாய்கள் படுகாயமடைந்துமுள்ளனர்.

இத்தாக்குதல்களில் ஒரு கவச வாகனம் உட்பட மூன்று இராணுவ வாகனங்கள் புலிகளினல் முற்ருகத் தகர்க்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் தொடர்ந்தும் புலிகளின் தாக்குதல் நடைபெறும் சாத்தியக்கூறுகள் இருப்பதால் பெருந்தொகையான படையினர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடந்த வாரம் விசேஷ அதிரடிப்படை பொலிஸ் பிரிவு ஒன்று இப்பகுதிக்கு விரைந்ததனையடுத்து படைகள் தொடர்ந்து குவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்துவரும் தகவலகள் தெரிவிக்கின்றன. (சி-ரி)

## இராசி பலன்

31 - 07 - 1991
(தமிழ்த்திகதி ஆடி 15)
புதன்கிழமை

பஞ்சமி பி. இ. 3-58வரை, பூரட்டாதி காலை 7-40 வரை, அமிர்தசித்தயோகம், இராகு காலம் பகல் 12-03 முதல் 1-33 வரை, சுபநேரம் மாலை 4-33 முதல் 6-03 வரை.

மேடம்: தொழில் முறையீடு, மனவேதனை, அச்ச உணர்வு.

இடபம்; குடும்பத்தில் சுப நிகழ்வு, வெற்றிக்களிப்பு, பண வரவு.

மிதுனம்: பணியாள் ஒத்துழைப்பு, கடன்வசூல், குடும்ப சுகம்.

கடகம்: வாயுத் தொல்லை, குடும்பப் பகை, பிடிவாதம்.

சிங்கம்: நிலைகுலைவு, அவப் பெயர். குடும்ப மோதல்.

கன்னி: வசதி வாய்ப்பு, குடும்பச் சிறப்பு, காரியச் சித்தி.

துலாம்: மறைமுக உதவி, வேலைப் பளு, விகடத்தன்மை;

விருச்சிகம: பயணக்களைப்பு, அதிகயோசனை, குடும்பப்பிரிவு.

தனுசு: குற்ற உணர்வு, அயலவர் பகை, கற்பனை.

மகரம்: இனசன உறவு, நற்செய்தி, வாகனவசதி.

கும்பம்; கண்ணில் ரோகம், வைத்தியச்செலவு, புத்திரர் துன்பம்.

மீனம்: எதிர்பாராத உதவி, குடும்ப உல்லாசம், கருத்து மோதல்.

- ஜோஸ்யர்

# யுத்தத்தை நீடிக்கமுடியாது

# சிறீலங்கா அரசு திண்டாட்டம்

(கொழும்பு)

பாதுகாப்புச் செலவினம் அதிகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி, தொடரும் இராணுவ நடவடிக்கைகளின் தோல்வி போன்ற பல காரணங்களினால் வடபகுதி யுத்தத்தைத் தொடரமுடியாத நிலையில் அரசு திண்டாடிக் கொண்டிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடரும் யுத்தத்தினால் பாரிய பொருளாதார நெருக்கடி நிலைக்கு நாடு உள்ளாகி இருக்கிறது. இதனால் யுத்தத்தை நீடிப்பதா? நிறுத்துவதா? என்பது பற்றி முடிவெடுக்க முடியாத நிலையில் அரசு திணறிக்கொண்டிருக்கிறது.

முப்படைகளின் முழுப்பலத்தையும் பிரயோகித்து வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வரலாம் என்று அரசு தீட்டிய திட்டம் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுவிட்டது.

இதனால் இராணுவ ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் அரசு பெரியதொரு நெருக்கடியை எதிர்கொண்டு நிற்கின்றது.

யுத்தங்களுக்கெல்லாம் தாய் யுத்தம் என்று கூறப்படும் ஆனையிறவை மீட்கும் போரில் வெல்லமுடியாத நிலையில் அரசு துருப்புக்கள் நிலைகுலைந்துவருகின்றன.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர பல கட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம் தனது இராணுவ இலக்குகளை எந்தக் காலத்திலும் அடையமுடியாதென்பதனை அரச தரப்பினர் உணர்ந்துகொண்டுள்ளனர்.

யுத்தம் தொடர்வதாக இருந்தால் இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமடைவதுடன் செலவினங்கள் அதிகரித்துச் செல்லும் அதேவேளை ஸ்ரீலங்கா அரசின் வருமானத்திலும் பாரிய வீழ்ச்சி ஏற்படலாமென்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில் யுத்தம்பற்றி முடிவெடுக்க முடியாத நிலையில் அரசு திண்டாடுகிறது.

## உலர் உணவு நிவாரணம் விரைவில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கும் தொழில் இழந்தவர்களுக்கும் வழங்கும் உலர் உணவு நிவாரணம் அடுத்த இரண்டு கட்டங்களாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளன.

1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கு அடுத்த இரண்டு கட்டங்களும் காசுக்கு வழங்கப்படும்.

தற்போது கையிருப்பில் இருக்கும் உணவுவகைகளை, இரண்டு வாரங்களுக்கு இலவசமாக வழங்கும்படியும், மேற்கொண்டு உணவுக் கப்பல்கள் வரும் பட்சத்தில் இலவச நிவாரணம் தொடர்ந்தும் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது. (வி-152)

## தமிழகத்தில் புலிகளுக்கு புகலிடமளித்தால் கடும் நடவடிக்கை

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப்புலிகளுக்கு யாராவது உதவியளித்தாலோ அல்லது புகலிடமளித்தாலோ அவர்கள்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தமிழக காவல்துறை சட்ட ஒழுங்குப் பிரிவு தலைவர் திரு. டபிள்யு. ஐ. தேவாராம் கூறியுள்ளார்.

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்கத் தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [சி]

## வீரமரணமடைந்த போராளிகளுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாம் முற்றுகையின்போது நேற்று முன்தினம் வீரமரணம் அடைந்த விடுதலைப் புலிகள் போராளிகளான ராஜன் (குமாரசாமி குணராஜா-கொக்குவில்), சதீஸ் (க.புஷ்பாகரன்-கிண்ணியா), லிங்கேஸ் (வன்னியசிங்கி ஜவான் ஜெயராஜ்-உப்புவெளி), செனித் (குமாரசாமி திருவேகரன்-ஏழாலை), அலிஸ்ரன் (தி. கிருஷ்ணபாலன்-அம்பாறை), யோகன் (சி. கண்ணன்-சுழிபுரம்) நிருபா (சதாருஜினி சதாசிவம-பெரியகல்லாறு), செந்தூரன் (கந்தையா நாகேந்திரம்-அம்பாறை), காந்தரூபன் (பி நெல்சன்-வடகரை வீதி-திருமலை), சிலோஜன் (கிற்சபை நிரஞ்சன்-நாயன்மார்திடல்- தம்பலகாமம்), விநாயகன் (சி.மோகன்-சோவில்போரதீவு) ஆகியோரின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக உடுவில் மான்ஸ் பாடசாலையில் நேற்று வைக்கப்பட்டது. பொதுமக்கள் தமது கண்ணீர் அஞ்சலியைத் செலுத்தினர்.

இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தேவரண்ணா, ரஞ்சன் மாஸடர், சங்கீதா ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர் போராளிகளின் புகழுடல்கள், கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின.

## கைக்குண்டு தயாரிக்கும் தொழிற்சாலை கண்டுபிடிப்பு

[சென்னை]

சட்டவிரோதமாக கைக்குண்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று கோயம்புத்தூரில் இயங்குவது தமிழக பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கோயம்புத்தூரில் நடாத்தப்படும் இத்தொழிற்சாலையில் பத்தாயிரம் பிளாஸ்ரிக் குண்டுகளுக்கான மூலப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

### விடுதலைப்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

படையினர் முன்னேற முயலும் பகுதியெங்கும் நிலக்கண்ணிகளை விதைத்தும் பெரும் பதுங்குகுழிகளை அமைத்தும் திடீர் தாக்குதல்களை புலிகள் மேற்கொள்ளுகிறார்கள்.

புலிகளின் புதிய உத்திகளால் படையினர் முன்னேற முயலும்போது பெரும்சேதங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக இருக்கிறது என்றும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தரர். [மா]

### இனப் பிரச்னையை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்: அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை ஒன்றினால் தான் இலங்கைப் பிரச்னைக்கு தீர்வுகாணமுடியும் என்று இந்தியா நம்புகிறது. இலங்கை பிரச்சனையால் எழுந்துள்ள விளைவுகளிலிருந்து இந்தியா தனித்திருக்கவில்லை. இருக்கவும் முடியாது.

ஒருமைப்பாடுடைய இலங்கையையே இந்தியா விரும்புகிறது என்றும் அவர் கூறினார். (சி]

### இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் இலங்கை முக்கியமாக கோருமென எதிர்பார்க்கப்படுவதாகவும் பி. பி. ஸி.தெரிவித்தது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு ஹரோல்ட் ஹேரத்தின் விஜயம் இதற்கு உதவுமெனவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

மேலும் இலங்கைப் பிரச்னைக்கு உடனடியாக அரசியல் தீர்வொன்றை காணும் நோக்கிலும் நேற்று இரு தரப்பிடையேயும் முக்கியபேச்சுவார்த்தை நடைபெற்றதாம். (சி)

### புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இது தொடர்பாக இந்திய மத்தியஅரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தது என்பது பற்றி எதுவும் தெரியவில்லை என்றும பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

### ஹெலி தாக்குதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. [56]

### சாரண தலைவிகளுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தை சேர்ந்த சகல குருளைச் சாரணத் தலைவிகளையும், உதவி குருளைச் சாரணத் தலைவிகளையும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பாலம் பொதுப்பணி மன்றத்தில் கூடுமாறு குருளையருக்கு பொறுப்பான ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### நூல் வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

''கிரந்தாக்ஷர மாலா'' எனும் சமஸ்கிருத முதல் நூல் வெளியீட்டு விழா நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இன்று 31ம் திகதி புதன்கிழமை மாலை 4 மணியளவில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. கா சாம்பசதாசிவக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

### புல்லாவெளியில

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போகுவரை புலிகள் தாக்குதலை நடத்திய வண்ணமிருந்தனர்.

இதேவேளை, புல்லாவெளியில் நேற்று நடைபெற்ற மோதலில் லெப்டினன்ட் ஒருவரும். 3 சிப்பாய்களும் உயிரிழந்ததாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

புல்லாவெளிப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்துவைத்திருப்பதால், இராணுவம் விரைவாக முன்னேறமுடியாமல் இருப்பதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (மா-56)

### ஈழ அகதிகள்


(1ம் பக்கத் தொடர்ச்சி)

நரசிம்மராவும் வற்புறுத்தியுள்ளார்.

அகதிகளை இலங்கைக்குப் பாதுபாப்பாக அனுப்புவதற்கு ஏற்ற சூழ்நிலையை இலங்கை அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்றும் இந்தியத் தரப்பில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

தற்போது தமிழகத்தில் தங்கியுள்ள சுமார் 2 லட்சம் தமிழ் அகதிகளின் பெயர் விபரம் அடங்கிய பட்டியலையும் இந்தியா இலங்கைக்குச் சமர்ப்பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. [சி]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் வா. விஜசித்தம்பி

தோற்றம்: 02 - 02 - 1938

மறைவு: 11 - 08 - 1990

திதி: 31 - 07 - 1991

''உங்கள் நினைவு என்றும் எம்முடன் வாழும்''

குடும்பத்தினர்.

'அன்னகம்', கைதடி மேற்கு, கைதடி. (ஏ 1469)

## ஆட் கடத்தல் விசாரணை ஆகஸ்ட்டில் ஆரம்பம்

[கொழும்பு]

ஆட்களை கடத்திக்கொண்டு செல்வதுபற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அதன் விசாரணைகளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5ந் திகதி ஆரம்பிக்கவிருக்கிறது.

விசாரணைகள் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. [மா]

### ஒரு அதிகாரி உட்பட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த காயமடைந்ததாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (மா)

### வாழப்பாடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காவிரி நீர்ப்பிரச்னை இந்தியாவில் தற்போது பெரும் சர்ச்சையைக் இளப்பியுள்ளதும் தெரிந்ததே. (சி)

### காரைநகரிலிருந்து ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து நேற்று நண்பகல் ஏவப்பட்ட ஷெல்களினால் பொன்னாலையில் மூன்று வீடுகள் பலத்த சேதம் அடைந்துள்ளன. தில்லையம்பலம், நவரத்தினம், நித்தியானந்த ஆகியவர்களின் வீடுகளே சேதமடைந்தனவாம்.

நேற்றிரவு காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல்கள் பொன்னாலையை நோக்கி ஏவப்பட்டது. (153)

### அமைச்சர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காவிரிநீர்ப்பிரச்னை தொடர்பாகவே இவர் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்ததாகவும் இதே பிரச்னையில் மத்திய தொழில் இணையமைச்சரும், தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. வாழப்பாடி ராமமூர்த்தியும் தமது பதவியை ராஜினாமாச் செய்ததும் தெரிந்ததே. [க]

### ஆசிரியர் பற்றாக்குறை

[அச்சுவேலி]

குட்டியப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நீண்டகாலமாக பூர்த்தி செய்யப்படாமல் இருப்பது பற்றி பாடசாலை அபிவிருத்திச்சங்கம் கவலை தெரிவித்துள்ளது,

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number B/180336/91